# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# க.பொ.த (உ/த) முன்னோடிப்பரீட்சை - 2017

| தரம் : 13 | தமிழ் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

* பகுதி I இல் இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

**மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

01) 1) **நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்**
**பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல**
**உள்ளந்தாங்கா வெள்ள நீந்தி**
**அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்**
**பெரிதாலம்ம நின் பூசலுயர் கோட்டு**
**மகவுடை மந்தி போல**
**அகனுறத் தழீ இக் கேட்டு நரற்பெறினே.** (12 புள்ளிகள்)

அ) இச் செய்யுளில் முதல், கரு, உரிப்பொருட்கள் வெளிப்படுமாற்றை எடுத்துக் காட்டுக.
ஆ) இச் செய்யுளில் தலைவனின் உள்ளத் தவிப்பு வெளிப்படுமாற்றினை விளக்குக.
இ) இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக.
ஈ) இச் செய்யுளில் இடம்பெறும் அகத்திணைப் பண்புகளைத் தருக.

2) **சிரித்த பங்கய மொத்த செங்க**
**ணிராம னைத் திருமாலையைக்**
**கரிக்கரம் பொரு கைத்தலத் துயர்**
**களப்பு றாணனிதற்கு முன்**
**வருந்த தண் கதிர் முத்தாகு யும்**
**மண்ணனைத்தும் நிழற்ற மேல்**
**விரிந்த பந்தர் பிரித்ததா மென**
**மின்னாளித்து வனெமே.** (12 புள்ளிகள்)

1) இச்செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பம் எது?
2) இச் செய்யுளின் பொருளை இக்கால மொழி நடையில் எழுதுக.
3) இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக.
4) செய்யுளில் கூறப்பட்ட இராமனது பெருமைகள் யாவை?

**"அ" பகுதியிலுள்ள கவிதையினைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களிற்கு விடை தருக. அல்லது "ஆ" பகுதியிலுள்ள உரைப்பகுதியை படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக?**

02) 1) அருளில் முதலோன், அன்புடையோன்
அகிலம் புரக்கும் எங்கோமான்
திருவார் மாந்தார் திருநாவில்
தேனாம் இனிய மொழி வைத்தோன்
உரவோன், அன்னான் திருநாமம்
உன்னி, இதனை ஓதுகிறேன்

*செய்யகருணைச் செழுஞ்சோதி*
*சிந்தை நீறி உழல் வாரும்*
*உய்ய அருளும்: உள்நொந்தார்*
*உருக அருளும்: ஒரு குரலில்*
*வையம் கொள்மா பேரரசும்*
*வழுத்தி இரக்கும் ஒரு சீமான்!*
*ஐய! கருணையங்கடலில்*
*ஆடா தானின் பாடென்னே!*

*தன்னில் தானம் நிலையுடையான்*
*தனியோர் ஆட்சி வலியுடையான்*
*தன்னை உணர்வார் அருகமை வான்*
*தனக்கே உரியார் துயர்களைவான்*
*அன்னோன் ஆற்றல் ஆழத்தே*
*அளத்தார் யாரே? அளப்பாரே!*
*ஒன்று மற்ற தொன்றாலே*
*உலகைச் செய்தான் என்னிறையே!*

*திரையின் பின்னால் நோக்கிறான்*
*தீங்கின் பாலே திளைப்பாரக்குத்*
*துரும்பைக்கொண்டே பெருந்துன்பம்*
*தொடரச் செய்யும் மாவல் லோனே!*
*இருமை உலகும் அவனறிவில்*
*இரண்டு துளிகள் எனலாமே?*
*அருமை இறவன் புகழங்கி*
*அறிவாம் கைக்கு வசமாமோ?*

1) *இக் கவிதையினூடாக கவிஞர் கூறவந்த விடயம் யாது?*
2) *இக் கவிதையின் எடுத்துரைப்பு முறையினை விளக்குக.*
3) *இக் கவிதையில் சமயப் பொதுமை எவ்வாறு பேணப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுக.*
4) *இக் கவிதையில் இடம்பெற்ற உருவக அணியினைக் குறிப்பிடுக.* *(16 புள்ளிகள்)*

02) *"ஏன் நீ வந்தனி? என்று எரிஞ்சு விழுந்தா அவ. இதுக்கு நான் என்னத்தைச் சொல்லுறது? என் சேலைத் தலைப்பு முடிச்ச அவிழ்த்து நூறுரூபாவையும் கொடுத்தன். நாலாமடிச்சு முடிஞ்சி வைச்சிருந்த பத்துப் பத்து ரூபாத்தாள்கள். அத வாங்கின உடன மகள் திரும்பிக் கொண்டு நடந்தா. நான் அவ்விடத்திலேயே தொகைப்பூண்ட மிரிச்சவள் போல நிக்கன், மகள் போகக்குள்ள தன்னோட வந்தவளிட்டச் சொல்றா "எங்கம்மா இந்த வேலைக்காரிட்டக் காசக் குடுத்து அனுப்பியிருக்க."*

*எனக்கு பூமி பிளந்து என்னை விழுங்கினாப் போல இருக்கு அதுக்குப் பிறகு நான் ஊருக்கு வரல்ல. நேற்றுத்தான் வந்தன். என்னை பைத்தியம் என்று ஊருக்கு சொல்றாங்க மகனே! நீ சொல்லுடா எனக்குப் பைத்தியமாடா? உன் சைக்கிளில ஒட்டியிருக்கிற கழியெல்லாம் கழட்டிற்றியா? அப்ப இனி நீபோப்போறா.*

*என்ர கதையும் முடிஞ்சிடா மகனே, ஏண்டா உனக்கும் ஒரு அம்மா இருப்பா. நீயும் ஒரு வாத்தியார் என்னைப்போல உன்ர அம்மாவையும் நீ பைத்தியக்காரி ஆக்கிவிடாதே. போய் வாடா மகனே போ. நானும் போறன். என்ர சாதிசனம் ஈச்சிலப்பத்தையிலையும் இருக்கு. பஸ்வந்தோடன நானும் போகப் போறன் அங்க.*

1) *மகளின் குண இயல்பு எவ்விதம் சித்திரிக்கப்பட்டுள்ளது?*
2) *இப் பந்தியில் காணப்படும் அணி யாது? அதனை விளக்குக.*
3) *தாயின் குணஇயல்பு எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?*
4) *இப் பகுதியை வாசிக்கும் போது ஏற்படும் உணர்வு யாது?* *(16 புள்ளிகள்)*

**03)** **அவையஞ்சாமை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு**

*1) அவை அஞ்சாரது இயல்பு*
*2) அவையஞ்சாரது ஒரு சார் பயன்*
*3) அதன் காராணம்*
*4) அவையஞ்சுபவரது இழிவு* *(20 புள்ளிகள்)*

**04)** **கைகேயி சூழ்வினைப் படலத்தில் தசரதன் கைகேயின் கடுமொழி கேட்டு அடைந்த துன்பம் முதல் தசரதன் கைகேயிக்கு வரத்தை தந்தேன் என்று கூறுதல் வரையான பகுதியை ஆதாரமாகக் கொண்டு**

*1) தசரதனின் துயரம்*
*2) தசரதன் இராமன் மீது கொண்ட பாசம்*
*3) கைகேயியின் குணத்தன்மை*
*4) உவமையணிகள் எவையேனும் மூன்றினை விளக்குக.* *(20 புள்ளிகள்)*

**05)** **சீறாப்புராணம் மழையை அழைப்பித்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு**

*1) மழை இல்லாரமயால் ஏற்பட்ட துன்ப நிலை*
*2) கடும் மழை பெய்ததனால் ஏற்பட்ட விளைவுகள்*
*3) இறைவனின் பெருமைகள்*
*4) உமறுப்புலவர் கையாண்ட அணிச்சிறப்புக்கள்* *(20 புள்ளிகள்)*

**06)** **விண்மீன்களுக்கு திரும்பி ஏகுதல் என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு**

*1) இக் கட்டுரையில் டானிக்கன் தரும் கருத்துக்கள் எவை?*
*2) உயிரினங்ள் பால் மண்டலத்தில் இருந்தன என்பதற்கான சான்றுகள்*
*3) வேற்றுக் கிரகப் பயணம் தொடர்பாக எடானிக்கன் முன்வைக்கும் சான்றுகளை விளக்குக.*
*4) வேற்றுக் கிரக மனிதன் பூமிக்கு வந்தது சாத்தியமானது என்பதற்கான சான்றுகள் எவை?*
*(20 புள்ளிகள்)*

**07)** **மருதூர்க்கொத்தனின் 'ஒளி' என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.**

*1) 'ஒளி' என்ற தலைப்பு பெறும் முக்கியத்துவம்*
*2) ஆசிரியர் கூறமுனையும் முக்கியமான கருத்துக்கள்*
*3) சிறுகதையின் சிறப்பம்சம்*
*4) மொழி நடை* *(20 புள்ளிகள்)*

**08)** **மேல் வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

*1) மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ .... என்ற பாடலில் வெளிப்படும் கம்பனின் கவித்துவம்.*
*2) சுந்தரரின் சீபர்ப்பதம் பதிகத்தில் சீர்ப்பதமலையின் சிறப்பு*
*3) நீண்ட பயணம் நாவலில் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் அவலங்கள்*
*4) தேம்பவணி பைத்திரம் நீங்குபடலத்தில் இயற்கைக் காட்சிகள் வர்ணிக்கப்படும் விதம்.*
*(20 புள்ளிகள்)*

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
## க.பொ.த (உ/த) முன்னோடிப்பரீட்சை - 2017

| தரம் : 13 | தமிழ் - II | நேரம் : 3.00 மணி |
| --- | --- | --- |
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

*** பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும் பகுதி II இன் "அ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் "ஆ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி - I

**மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**

**I.**

01) பின்வருவனவற்றுள் கடையண்ண வெடிப்பொலி
1) ப் 2) ச் 3) க் 4) ட் 5) ற் (.......)

02) பின்வருவனவற்றுள் ஆடொலி எழுத்து
1) ர் 2) ள் 3) வ் 4) ங் 5) ற் (.......)

03) நெடிற்றொடர்க்குற்றியலுகரம் இடம் பெற்றுள்ள சொல்
1) பேச்சு 2) தூது 3) விடாது 4) பெய்து 5) பந்து (.......)

04) சொல்லின் இறுதியில் இடம்பெறாத உயிரெழுத்து
1) அ 2) எ 3) ஐ 4) உ 5) ஓ (.......)

05) குற்றியலுகரப் புணர்ச்சி
1) பூவை 2) தெரிவை 3) வாளை 4) மார்பை 5) வாழை (.......)

06) உடன்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
1) உப்பை 2) குப்பை 3) கிளியை 4) தேரை 5) கல்லை (.......)

07) பெயரும் வினையும் இணைந்த கூட்டுப்பெயர்
1) அடிபிடி 2) தலையிடி 3) தலைமுடி 4) இடிஇடி 5) தலைவன் (.......)

08) நேற்று நன்றாகப் பாடியவள் இன்றும் நன்றாகவே பாடுகிறாள் இதில் பாடியவள் என்பது.
1) தொழிற்பெயர் 2) ஆக்கப்பெயர் 3) மாற்றுப்பெயர்
4) ஆகுபொருள் 5) வினையாலணையும் பெயர். (.......)

09) பின்வருவனவற்றுள் வினையடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்
1) வருகை 2) புத்திசாலி 3) கடனாளி 4) ஏவுகணை 5) மேலோர் (.......)

10) "ஈவன் என்பால் பரம்கெட இப்பொழுதே பகர்ந்திடு என்றாள்" பகர்ந்திடு என்பது
1) கூட்டுவினை 2) தனிவினை 3) செயற்பாட்டுவினை
4) பிறவினை 5) செயற்படு பொருள் குன்றிய வினை. (.......)

11) ஊழிற் பெருவலியாவுள இதில் வந்த உருபும் பொருளும்
1) இல், இடம் 2) இல், நீங்கல் 3) இல், ஒப்பு 4) இல், நீத்தல் 5) இல், ஏது (.......)

12) "மூன்று வினாக்களுக்க மட்டும் விடை எழுதுக" இதில் "எழுதுக என்பது
1) கூட்டுவினை 2) செயற்ப்பாட்டு வினை 3) ஏவல் வினை
4) செயப்படுபொருள் குன்றிய வினை 5) வியங்கோள்வினை (.......)

13) "செய்யும்" என்பது காலம் காட்டுவது.
1) பகுதி 2) விகுதி 3) இடைநிலை 4) விகாரம் 5) சந்தி (.......)

14) சுடச் சுட என்பது
1) இணைமொழி 2) இரட்டைக் கிளவி 3) அடுக்குத்தொடர்
4) அடுக்கிடுக்குத்தொடர் 5) பெயரெச்சத்தொடர். (.......)

15) "நீ வராமல் விட்டிருந்தால் அவன் கவலைப்பட்டிருப்பான்" இவ்வாக்கியத்தில் "நீ வராமல் விட்டிருந்தால்" என்பது.
1) எச்சத் தொடர் 2) வினையெச்சத்தொடர் 3) எதிர்மறைத் தொடர்
4) நிபந்தனையெச்சத் தொடர் 5) எதிர்மறை நிபந்தனையெச்சத் தொடர் (.......)

16) செயப்படுபொருள் குன்றாத வினை வாக்கியம்
1) அவன் நான்றாக இருக்கிறான். 2) அது அழகான பறவை
3) அவள் நன்றாகப் பாடினாள் 4) அந்த விடயம் நன்றாகச் சொல்லப்பட்டது.
5) அவனும் இவனும் ஏன் போனார்கள். (.......)

17) தனி வாக்கியமாக அமைவது.
1) அம்மாவும் அப்பாவும் கோவிலுக்குப் போனார்கள்
2) ஒரு அப்பத்தையும் தோசையையும் சாப்பிட்டாள்
3) அவர்கள் பாலைக் கறந்து குடித்தார்கள்
4) அவள் என்னைத் தூங்க வைத்தாள்
5) அவளுக்கு பாலும் பழமும் பிடிக்கும். (.......)

18) அவரது தொனியில் ஆவேசமும் முகத்தில் இயலாமையும் விரக்தியும் மாறிமாறித் தோன்றின. இவ் வாக்கியத்தில் உம் உணர்த்துவது.
1) எண்ணுப் பொருள் 2) எச்சப் பொருள் 3) முற்றுப் பொருள்
4) எதிர்மறைப் பொருள் 5) இணைப்புப் பொருள் (.......)

19) முடி என்பது முதல் வினையடியாக அமையாத வாக்கியம்
1) அவர் விரைவில் முடிக்கமாட்டார் 2) அதை நன்றாக முடி
3) எல்லாம் நேற்றோடுமுடிந்தது 4) இன்று எல்லாவற்றையும் செய்து முடிக்கலாமா
5) இன்றே எல்லாவற்றையும் முடித்து விட்டாரா? (.......)

20) பின்வருவனவற்றுள் உருபு மயக்கம் இடம் பெற்றுள்ள வாக்கியம்
1) தூணில் சாய்ந்தான் 2) அரிசியைச் சோறாக்கினான் 3) தூணைச் சார்ந்தான்
4) தெருவாசல் போனான் 5) காலத்தில் செய்த உதவி (.......)

(20 புள்ளிகள்)

**II.** சுருக்கமான விடை தருக.
1) படர்க்கைத் தற்சுட்டுப் பெயருக்கு இரண்டு உதாரணம் தருக.
2) விணையாலணையும் பெயர் என்றால் என்ன உதாரணம் தருக.
3) பெயரெச்சம் என்றால் என்ன என்பதை விளக்குக. உதாரணம் தருக.
4) குற்றியலுகரம் என்றால் என்ன?
5) நிரப்பித் தொடர் என்றால் என்ன உதாரணம் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

02) **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

1. சிறுகதை என்பது ஓர் உரை ஆக்க இலக்கிய வகையாக இக் காலத்தில் பிரசித்திபெற்றுள்ளது. கதையைக் கையில் எடுத்தும் ஒரு தடவையிலே வாசித்து முடித்துச் சுவைக்கக் கூடிய அளவினதாக இருப்பதே அதன் பிரசித்திக்குப் பிரதான காரணம். மக்கள் வாழ்க்கை எந்திர கதியிலே இயங்கும் இக்காலத்திலே, கிடைக்கும் சிறிதளவு ஓய்வு நேரத்திலே, ஒருவர் வாசித்து இலக்கியச் சுவை நுகர்வதற்கு வாய்ப்பான இலக்கிய வடிவம் சிறுகதையேயாகும். சில சிறுகதைகளை ஐந்து நிமிடத்தில் வாசித்து விடலாம். வேறு சிலவற்றை வாசிப்பதற்குச் சற்றே கூடுதலான நேரம் வேண்டும். ஐந்து நிமிடத்தில் வாசித்தாலென்ன, அரைமணிநேரத்தில் வாசித்தாலென்ன, நல்ல சிறுகதையொன்று மனித வாழ்க்கையின்

*யாதேனுமோர் அம்சத்தை கலைத்திறனுடன் விமர்சிப்பதாயிருக்கும். நிகழ்ச்சியொன்றை நிறைவு பெற விறுவிறுப்பாக கூறிடும். இரண்டொரு பாத்திரங்கள் எம் மனக்கண்ணிலேயே முழு உருவத்தோடு தோன்றும் கதையின் தொடக்கம் முடிவு எல்லாம் நாடக நயம்படக் கூறப்படும். அது தன்னளவிலே முற்றுப்பெற்று எம்மனதிலே ஒரு வகை நிறைவை உண்டாக்கி, இலக்கியச் சுவையையும் ஊட்டிவிடும்.*

*சிறுகதை தனக்கென ஒரு கட்டுக்கோப்பையும் வளர்ச்சியையும் உடையது. அது நாவிலிருந்து நீளத்தால் மாத்திரம் வேறுபடுவதன்று. பொது அமைப்புப் பாங்கிலும் வளர்ச்சியிலும் வேறுபடுகின்றது. நாவலாசிரியன் ஆறுதலான போக்கிலே கதையை நடத்திச் செல்வான். இடையிடையே காட்சிகளை வருணிப்பதற்கும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கும், பாத்திரங்களின் செயல் நோக்கங்களையும் உள்ளுணர்வுகளையும் எடுத்துச் சிறுகதை எழுத்தாளனோ ஒரு சூழ் நிலையின் அல்லது பாத்திரத்தின் யாதாயினுமோர் அமிசத்தைத் தெரிந்தெடுத்து அதனை மிகுந்த செறிவான முறையிலே வாசகருக்கு முன்வைக்கப்படுகின்றான். பொதுவாக ஒரு பாத்திரத்தின் குறித்தவொரு குணவியல்பிலே அல்லது ஒரு தனிச் சம்பவத்திலே விவரங்களைக் குவிய வைத்துக் காட்டுவான்.*

*(10 புள்ளிகள்)*

***2.* பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

*கல்வி நமக்கு பல நன்மைகளைத் தருகிறது. கல்வியினால் நம் அறிவு வளர்கிறது. கல்வியால் நாம் தொழில் பெறுகிறோம். கற்றவர்களை உலகம் மதிக்கிறது. எல்லாவற்றிலும் மேலாகக் கல்வி நமக்கு கடவுள் உண்மையை அறிவுறுத்தி நாம் கடவுளை வணங்கத் துணை செய்கிறது. கடவுளை வணங்கத் துணை செய்யாத கல்வி சிறந்த கல்வியாகாது. "கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்" என்பர் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குணவிசேடங்களையும் அவரை அன்பு செய்யும் முறைகளையும் அவரை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகிறோம். அவ்வாறு அறிவதனால் நமக்குக் கடவுளிடத்து அன்பு உண்டாகின்றது. அவ் அன்பு கடவுட் பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது. கடவுட் கொள்கை இல்லாதவர்கள் கல்வியினால் கடவுள் நம்பிக்கையைப் பெறுகின்றார்கள். கடவுள் கொள்கையுள்ளவர்கள் கல்வியினால் சமய ஊக்கம் அடைகிறார்கள்.*

*கல்வியைப் போலவே கடவுட் கொள்கையைப் பெறுவதற்கும் இளமைப் பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கங்கள் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும். "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" ஆதலால் நமது பழக்கவழக்கங்களைச் சிறுவயதிலேயே திருத்தியவனாகக் கற்றுக்கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையையும் கடவுளின் தொண்டையும் இளமையிலே போதித்தல் அஃது ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும். வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏற்றுதல் போலச் சிறுவர் மனதிலும் கடவுள் நம்பிக்கை நன்கு பதியும். அவ்வாறே நற்பழக்கங்களையும் இளமையிலேயே பழகிக் கொள்ளுதல் எளிதான காரியமாகும். இளமையிற் கற்றுக்கொள்ளாது வயது வந்த பின் நற்பழக்கங்களை மேற்கொள்ளலாமெனல் பொருந்தாது.*

*1)* ஆசிரியர் தனது கருத்தை வலியுறுத்தக் கையாண்டுள்ள உத்திகள் யாவை?

*2)* கல்வியினால் ஏற்படும் நன்மைகளாக ஆசிரியர் எடுத்துரைப்பவை எவை?

*3)* "வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏறுதல் போல" என்னும் உவமைத் தொடர் மூலம் ஆசிரியர் விளக்கமுனையும் கருத்து யாது?

*4)* இவ்வுரைப்பகுதியில் கூறப்படட்ட கருத்துக்குப் பொருத்தமற்ற கூற்றாக அமைவது எது?

அ) இளமையிலே கல்வியை தேடிக்கொள்ளுதல் வேண்டும்

ஆ) கடவுள் நம்பிக்கைளை ஏற்படுத்தப் பொருத்தமான காலம் முதுமைக் காலம் ஆகும்.

இ) கல்வியின் பயன் கடவுளை வணங்குதல்.

*(10 புள்ளிகள்)*

*03)* பின்வரும் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

அ) புலம் பெயர் தமிழ்
ஆ) போதையற்ற உலகம்
இ) இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை
ஈ) சமுதாயம் எதிர்நோக்கும் சவால்கள்
உ) ஒற்றுமையே பலம்

*(20 புள்ளிகள்)*

## பகுதி - II

### பிரிவு - அ

*04) அ) பதினென் மேற் கணக்கு நூலில் அகத்திணை நூல்களைக் குறிப்பிடுக.*
*ஆ) சங்ககால இலக்கியங்களின் சிறப்பியல்புகளை விளக்குக.*
*இ) சங்கமருவிய காலத்தில் தோற'்றம் பெற்ற இலக்கியங்களை வகைப்படுத்துக.*

*05) அ) பல்லவர் கால பக்தி இலக்கியங்களை வகைப்படுத்துக.*
*ஆ) பல்லவர் கால இலக்கியப் பண்புகளை விளக்குக.*
*இ) காரைக்கால் அம்மையார், முதலாழ்வார் பாடல்களின் செல்வாக்கு எவ்வாறு பல்லவர் காலத்தில் காணப்பட்டது.*

*06) அ) தொடக்க காலத்தமிழ் நாவல்களின் முக்கிய பண்புகளை எடுத்துக்காட்டுக.*
*ஆ) இருபதாம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி மதிப்பிடுக.*
*இ) உரை நடை வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்த காரணிகளை விளக்குக.*

*(10 புள்ளிகள்)*

### பிரிவு - ஆ

*07) அ) ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் தோன்றிய இலக்கிங்களை வகைப்படுத்துக.*
*ஆ) ஆரியச் சக்கரவர்த்தி கால இலக்கியப் பண்புகளை விளக்குக.*
*இ) ஆரியச்சக்கரவர்த்திக் கால புலவரான அரச கேசரியின் தமிழ்ப்பணியினை மதிப்பிடுக.*

*08) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.*
*அ) புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை*
*ஆ) பேராசிரியர் ம.மு. உவைஸ்*
*இ) கே. கணேஸ்*
*ஈ) வ.அ. இராசரத்தினம்.*
*உ. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்.*

*(15 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education